[8th February 1955

SRI M. NARAYANA KURUP :—" Did not the Collector of Malabar recommend to the Government that the two adjoining firkas of Walluvanad taluk touching the Palghat taluk may be included in the National Extension Service Scheme."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I do not have that information before me just now. The Collector may have sent so many recommendations but we took up last time only areas which were contiguous to areas where the National Extension Service Schemes are already in existence."

Vaigai Reservoir Project.

* 576 *Q.*—SRI G. GOVINDAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given to starred question No. 883 on 18th May 1954—

(*a*) the exact scope of the proposed Vaigai Reservoir Project in the Madurai district; and

(*b*) whether the irrigation facilities to the villages in the eastern portion of the Ramanathapuram district already under Vaigai ayacut will be adversely affected by it?

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" (*a*) The reservoir will impound the waters diverted from the Periyar lake and also the surplus waters of the Vaigai itself, and the scheme will be so worked

(i) that the Vaigai flows impounded in the Reservoir are used exclusively to boost, when necessary, supplies in the Vaigai channels in the Ramanathapuram district and stabilize irrigation under the old Vaigai channels and tanks served by them in that district; and

(ii) that only the Periyar waters will be used to serve a new area of about 20,000 acres distributed as follows :—

(a) about 3,000 acres of percolation affected dry lands situated in the midst of wet lands in the existing Periyar delta and another 7,000 acres in Sivaganga taluk, Ramanathapuram district, the total extent of these 10,000 acres being situated on the left side of the Vaigai; and

(b) about 10,000 acres in the Tirumangalam taluk of the Madurai district on the right side of the river.

" (*b*) The answer is in the negative."

SRI G. GOVINDAN :—" கனம் சபாநாயகர் அவர்களே, வைகை நீரை கிழக்கு ராமநாதபுரம் ஜில்லாவுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டபோதே மதுரை ஜில்லாவிலுள்ள திருமங்கலம் தாலூகாவுக்கும் ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள சிவகங்கை தாலூகாவுக்கும் கொடுத்துவிட்டு தண்ணீர் இல்லாமல் வரண்டு கிடக்கும் கீழ் ராமநாதபுரம் ஜில்லாவுக்குக் கொடுக்காதது வருந்தத்தக்கதாகும். இருந்தாலும் இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்திலேயாவது இந்தப் பிரதேசத்திற்குத் தண்ணீர்ப் பாசன வசதி செய்து கொடுக்கப்படுமா ? "

8th February 1955]

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" I am afraid the hon. Member has not understood what I have replied just now. நான் கொடுத்த பதிலிலேயே இதைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பெரியார் தண்ணீர்தான் ராமநாதபுரம் ஜில்லா சிவகங்கை தாலூகாவுக்கும் மதுரை, திருமங்கலம் தாலூகாவுக்கும் கொடுக்கப்படுகிறது. வைகைத் தண்ணீரை நாங்கள் இதில் அடக்கி கீழ் ராமநாதபுரத்திற்கும் கொடுக்க உத்தேசித்திருக்கிறோம். ஆகவே இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் இதைச் சேர்க்கவேண்டியதே இல்லை."

SRI P. CHELLADURAI :—" கனம் சபாநாயகர் அவர்களே, சிவகங்கை தாலூகாவுக்குக் கொடுக்கும் தண்ணீரின் அளவைக் குறைத்துக் கொண்டு, எல்லா வகையிலும் மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கும் திருவாடானைத் தாலூகாவுக்கும் இந்த வைகை ஆறு திட்டத்தின் பலன் கிடைக்கும்படி அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ? "

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" சிவகங்கை தாலூகாவுக்கு முழுவதும் சப்ளை செய்தால் தண்ணீர் அங்கே எல்லா இடங்களுக்குமாவது போய்ச் சேரும். அவர்களுக்குக் கொடுக்கும் தண்ணீரின் அளவைக் குறைத்துக்கொண்டு திருவாடானை தாலூகாவிற்குக் கொடுத்தாலும் தண்ணீர் திருவாடானை தாலூகா வரையில் கூடப் போய்ச் சேராது. போகும் வழியில் ஆற்று மணலே அதனை உறிஞ்சிவிடும்."

SRI P. S. KRISHNASWAMI AYYANGAR :—" பெரியார் திட்டத்தின் கீழ் ஆதியில் உத்தேசித்த பாசன விஸ்தீர்ணத்தைக் காட்டிலும் இப்பொழுது அதிக விஸ்தீர்ணத்துக்குப் பலன் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. அதனால் ஏற்கெனவே கீழ் வைகைப் பாசனத்திற்கு உபயோகப்பட்டு வந்த தண்ணீர் பெரியார் பாசனத்திற்குத் திருப்பி விடப்பட்டு கீழ்வைகைப் பிரதேசத்திற்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலைமையில் புதிய வைகைத் திட்டத்தின்கீழ் தேக்கப்படும் தண்ணீரிலிருந்து ஏற்கெனவே நஷ்டமடைந்துள்ள கீழ் வைகைப் பாசனத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க சர்க்கார் முன்வருமா ? "

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" அப்படி நஷ்டம் எதுவும் ஏற்பட்டிருப்பதாக சர்க்கார் தஸ்தாவேஜுகள் ஒன்றிலும் தெரியவில்லை."

SRI A. IYANAR :—" அணை உருவாகியிருக்கும் பிரதேசமான ஆண்டிப்பட்டி, தேவதானப்பட்டி அருகாமையிலுள்ள நிலக்கோட்டை, போன்ற பிர்க்காக்கள் பஞ்ச ஏரியாக்களைச் சேர்ந்தன என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? தெரிந்தால் இத்திட்டத்தின் மூலமே அந்தப் பிரதேசங்களுக்கும் தண்ணீர்ப் பாசன வசதியைச் செய்துகொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ? "

THE HON. RAJA SRI SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" இதன் மூலம் ஏற்கனவே பரிசீலனை செய்யப்பட்ட இடங்களுக்குமாத்திரம் தண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியுமே தவிர, அவர்கள் சொல்லுகிறபடி பிற்போக்கான பகுதிகளுக்கு எல்லாம் பாசன வசதி செய்து கொடுப்பதாயிருந்தால் தண்ணீர் வசதி இல்லை."

SRI V. MUTHU :—" இப்பொழுது அணைக்கட்டு வேலை நடந்து கொண்டிருக்கிறது. பஞ்சப் பிரதேசத்திலிருந்து வந்திருக்கும் ஏழை ஜனங்கள் அங்கு வேலை செய்து வருகிறார்கள். ஆண்களுக்கு ரூ. 1–5–0 வீதமும் பெண்களுக்கு 15 அணா வீதமும் சர்க்கார் கூலி நிர்ணயம் செய்து கொடுத்து வருகிறார்கள். ஆனால், அங்கு சிறு கண்டிராக்டர்கள் . . ." 11-50 a.m.

MR. SPEAKER :—" மூலக் கேள்விக்கும் இப்பொழுது நீங்கள் கேட்கும் கேள்விக்கும் சம்பந்தமே இல்லை."

[8th February 1955

SRI MOOKKIAH THEVAR :—" அணைக்கட்டினால் பாதிக்கப்படுகிற 12 கிராமங்களிலுள்ள மக்களுக்கு இதுவரை எந்தவிதமான நஷ்ட ஈடும் கொடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அணைக்கட்டு வேலையில் வேலையும் இன்னும் சரியாகக் கொடுக்கப்படவில்லை."

MR. SPEAKER :—" The hon. Member can give notice of a fresh question."

Death of one Karuppiah in the Police lock-up.

* 577 *Q.*—SRI P. RANGASWAMI REDDIAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the body of one Karuppiah was exhumed from the burial ground in the presence of the Taluk Magistrate of Tirumayam, Tiruchirappalli district, in April 1954;

(*b*) whether one Ramayya, who was tortured in the Police Station along with Karuppiah, is dead or progressing satisfactorily in the dispensary at Tirumayam;

(*c*) how the news of the death of Karuppiah under suspicious circumstances came out;

(*d*) how long Karuppiah and Ramayya were kept in the Police lock-up before Karuppiah died; and

(*e*) whether any action was taken against the Police officers of Panayapatty and, if so, with what result?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) *to* (*e*) A statement [a] is placed on the table of the House."

SRI M. PALANIYANDI :—" சபை முன்பு வைக்கப்பட்டிருக்கும் ஸ்டேட்மெண்டைப் பார்க்கும்போது ஒரு சப்-இன்ஸ்பெக்டர் ஒருவரைக்கொன்றும் மற்றொருவரை புண்படுத்தியிருப்பதாகவும் தெரிகிறது. ஆனால், அவருக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை குறைவாக இருக்கிறது."

MR. SPEAKER :—" நீங்கள் மாஜிஸ்ட்ரேட்டை கிரிடிசைஸ் பண்ணக் கூடாது. மாஜிஸ்ட்ரேட்டின் தீர்ப்பைப்பற்றி இங்கே கேள்விகள் போடக் கூடாது."

SRI M. PALANIYANDI :—" பல கேசுகளில் கொடுக்கப்பட்டிருக்கும் தண்டனையின் அளவு போதாது என்று அரசாங்கம் கருதினால் மேல் கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ள அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. இந்த கேசில் சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டருக்குக் கிடைத்திருக்கும் தண்டனை போதுமானது என்று அரசாங்கம் கருதுகிறதா ; கொடுக்கப்பட்டிருக்கும் தண்டனை அந்த சப்-இன்ஸ்பெக்டர் இழைத்த குற்றத்திற்குப் போதுமானதல்ல என்று அரசாங்கம் கருதினால், பப்ளிக் பிராஸிக்யூட்டர்களுக்கு சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளை அனுப்பி இந்தக் கேசை மேல் கோர்ட்டுக்குக் கொண்டு போய், சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டருக்குத் தக்க தண்டனை கிடைக்கச் செய்ய இடம் இருக்கிறதா என்று ஆலோசனை செய்வார்களா ?"

THE HON. SRI C. SUBRAMANIAM :—" ஒவ்வொரு கேசுக்கும் தண்டனை கொடுக்கும்போது, எந்தக் குற்றத்திற்கு சாட்சியம் இருக்கிறதோ, அதற்குத் தகுந்தபடிதான் தண்டனை கொடுக்க முடியுமே தவிர, வெறும் சந்தேகத்தின்பேரில் பெரிய குற்றத்திற்குத் தண்டனை கொடுக்கமுடியாது. ஆகையால், இந்தக் கேசுக்குக் கொடுக்கப்பட்ட சாட்சியத்தை வைத்துக்கொண்டு செஷன்ஸ் ஜட்ஜ், ' இதில் கொலைக் குற்றத்திற்கு ருசு இல்லை ; அதைவிடக் குறைந்த அளவுக்குத்தான் ருசு இருக்கிறது ' என்று கம்மியான தண்டனையைக் கொடுத்திருக்கிறார்."

[a] Printed as Appendix II on pages 158–160 infra.